பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 690 **நாள்: 18.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் தூய்மைப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று (18.11.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-64க்குட்பட்ட வீனஸ் நகர், 11ஆவது பிரதான சாலையில் உள்ள மழைநீர் சேகரித்து வெளியேற்றும் நிலையம், வார்டு-68க்குட்பட்ட எஸ்.ஆர்.பி. காலனி சாலையில் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டியில் மேற்கொள்ளப்பட்ட வண்டல்கள் அகற்றும் பணி, எஸ்.ஆர்.ஒ. காலனி பகுதியில் விழும் நிலையில் உள்ள மரக்கிளைகளைக் கத்தரித்து அகற்றும் பணி, வார்டு-74க்குட்பட்ட ஏகாங்கிபுரம் கால்வாய் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயில் தூர்வாரும் பணி, யானைக்கவுனி சாலையில் உள்ள கழிவுமாற்று நிலையத்தின் செயல்பாடுகள், புளியந்தோப்பு பகுதியில் உள்ள நாய்கள் இனக் கட்டுப்பாட்டு மையம், ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு. அ.தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், வார்டு-159க்குட்பட்ட நோபல் தெருவில் உள்ள அம்மா உணவகம், வார்டு-160க்குட்பட்ட புதுத் தெரு பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணி, ஜி.எஸ்.டி சாலையில் உள்ள உணவகத்தில் உருவாகும் பெருமளவு கழிவுகளை முறையாகத் தரம் பிரித்து பெறப்படும் இடம், வார்டு-162க்குட்பட்ட கண்ணன் காலனி பிரதான சாலையில் உள்ள இலவச ஒப்பனை அறை ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அம்மா உணவகத்தில் பொது மக்களுக்கு தரமான உணவு வழங்கிடவும், பூங்காவின் மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடித்திடவும், பெருமளவு கழிவுகளை முறையாக தரம் பிரித்திடவும், கழிவறையினை தூய்மையாக பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி